**கவனிக்க.-** *2006.07.14 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1455 - 2006 ජූලි 21 වැනි සිකුරාදා - 2006.07.21

*1455 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 645 |


**கவனிக்க.-** (i) *கண்டிய திருமணம், மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2006, யூன் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2006, யூன் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(iii) *சூதாட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2006, யூன் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூலை 28 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, யூலை 14 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஸ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

இலங்கை உயர் தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்
(SLIATE)

**உயர் தொழில்நுட்ப நிறுவனம் - கொழும்பு 15**

*பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDE)*
*பாடநெறிக்கு மாணவர்கள் அனுமதி - கல்வியாண்டு 2006/2007*

மேற்காணும் பாடநெறிக்கு பிரவேசிப்பதற்காக பொருத்தமான தகைமை பெற்ற ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா கோட்பாடு (Theory) தொடர்பாக மூன்று ஆண்டுகால முழுநேர ஆங்கில மொழி மூலம் பாடநெறியாகும். அத்துடன் ஆறுமாதங்கள் பொறித்தொகுதி பயிற்சியும் சிவில் மின்சார மற்றும் மெக்கானிக்கல் பொறியியல் என்ற பெயர் கொண்ட மூன்று விசேட துறைகளில் வழங்கப்படுகின்றது. இந்தப்பாட நெறியைப் பின்தொடர்வோர் லண்டன் பொறியியல் கழகத்தினால் நிபுணத்துவம் பெற்ற பல யோக்கியதைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் CEI (லண்டன்) பகுதி 1 பரீட்சை இலிருந்து விதிவிலக்களிக்கப்படுவதற்கு தகைமை பெற முடியும்.

அனுமதிபெறுவதற்கான விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப் படுவதற்கு கவனத்திற் கொள்ளப்படுவதற்கு அவர் கீழ்க்காணும் தகைமைத் தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(1) அவர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;

(2) (i) 2005 இல் அல்லது அதற்கு முன்னர் இலங்கை, பரீட்சைகள் ஆணையாளரினால் நடத்தப்படுகின்ற க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்தில்) கீழ்க்காணும் பாடங்களில் ஒரே அத்துடன் அதே அமர்வில் நான்கு சித்திகள் பெற்றிருத்தல் :-

(அ) பிரயோக கணிதம்
(ஆ) தூய கணிதம்
(இ) பௌதிகம்
(ஈ) இரசாயனம்

(ii) 2005 இல் அல்லது அதற்கு முன்னர் இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்படுகின்ற க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டத்தை) ப் பின்தொடர்ந்துள்ளவர்கள் இணை கணிதத்தில் (combined Mathematics) ஆகக் குறைந்தது மூன்று பாடங்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி. விண்ணப்ப முடிவுத் திகதியன்று 23 வயதுக்குக் கீழ்ப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தெரிவு அலகு சராசரி புள்ளிகள் அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் Z-core அடிப்படையைக் கொண்டிருக்கும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தேவை எழுகின்றபோது குறிப்பிட்ட தினங்கள் வார இறுதி நாட்கள் போன்றே கிழமை நாட்களிலும் வகுப்புகளுக்குச் சமுகமளித்தல் வேண்டும்.

உத்தேச விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய தமது சொந்த விண்ணப்பங்களைத் தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

தயவுசெய்து இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துக்கு (SLIATE) விண்ணப்பக்கட்டணம் ரூபா 250 ஐ மக்கள் வங்கி, பார்க் வீதி கிளையில் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் மக்கள் வங்கிக் கிளையில் நடைமுறைக் கணக்கு இல. 0025-1010129111 இற்கு வரவு வைத்து ரசீதை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவும்.

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், இல. 42, ரொட்ரிகோ பிளேஸ், மட்டக்குளி, கொழும்பு 15" என்ற விலாசத்துக்கு 11.08.2006 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தனிப்பெரிய எழுத்துக்களில் "APPLICATION FOR ADMISSION TO HNDE COURSE - 2006/ 2007" என எழுதுமாறு விண்ணப்பதாரிகள் வேண்டப்படுகின்றனர். மேற்கூறப்பட்ட தேவைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இலங்கையிலுள்ள ஏதேனும் பல்கலைக்கழகத்தில்/இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி/தொழில்நுட்பக் கல்லூரி, கல்விக் கல்லூரி/ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அல்லது ஏதேனும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ளக மாணவராக பாடநெறியைப் பின்பற்றுகின்ற ஆட்கள், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் முழு நேர மாணவராகப் பதிவு செய்துகொள்ளப்படுவதற்கு தகுதி பெறமாட்டார்கள். ஒரே சமயத்தில் ஏதேனும் அரச நிறுவனங்களில் முழு நேர பாடநெறியைப் பின்தொடர்கின்றனர் என எவரேனும் மாணவர் கண்டுபிடிக்கப்படுமாயின் அவரது பதிவு இலங்கை உயர் கல்வி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் உடனடியாக இரத்துச் செய்யப்படும் என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

2006/ 2007கல்வியாண்டுக்காக ATI மட்டக்குளியவுக்கு மாணவர்கள் அனுமதி தொடர்பாக SLIATE பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும் என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்.

இல. 18/2, வோர்ட் பிளேஸ்,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE)**

உயர் தொழில்நுட்ப நிறுவனம்-கொழும்பு 15

*பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDE) பாடநெறிக்கு மாணவர்கள் அனுமதி கல்வியாண்டு-2006/2007*

1. பெயர் முதலெழுக்களுடன் :

2. முதலெழுத்துக்கள் குறிக்கின்ற பெயர்கள் :

3. தேசிய ஆளடையாள அட்டை இல. :

4. பிறந்த திகதி :

| | | |
|---|---|---|
| | | |

5. பால் :

| ஆண் | பெண் |
|---|---|
| | |

6. நிரந்தர விலாசம் (கீழேயுள்ள பெட்டியினுள்) :

7. நிருவாக மாவட்டம் :

8. முன்னுரிமைக்கமைய பொறியியல் துறை :

| | |
|---|---|
| 1 ஆவது முன்னுரிமை | |
| 2 ஆவது முன்னுரிமை | |
| 3 ஆவது முன்னுரிமை | |

9. க. பொ. த. (சா. த.) இல் ஆங்கில மொழிக்கான பெறுபேறு :

| ஆண்டு | சுட்டிலக்கம் | தரம் |
|---|---|---|
| | | |

10. (2005 இல் அல்லது அதற்கு முன்னர்) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிறந்த முயற்சியின் பெறுபேறு.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. தூயகணிதம் | |
| 2. பிரயோக கணிதம் | |
| 3. பௌதிகம் | |
| 4. இரசாயனம் | |
| கூட்டுப் புள்ளிகள்/Z Score | |

| பாடம் | தரம் |
|---|---|
| 1. இணை கணிதம் | |
| 2. பௌதீகம் | |
| 3. இரசாயனம் | |
| 4. பொதுவான பொதுப் பரீட்சை | |
| கூட்டுப் புள்ளிகள்/Z Score | |

| ஆண்டு | பாடத்திட்டம் | | சுட்டிலக்கம் | மொழிமூலம் |
|---|---|---|---|---|
| | பழைய | புதிய | | |

பரீட்சைக்கு தோற்றிய தடவை :

| 1ஆவது | | 2ஆவது | | 3ஆவது | |
|---|---|---|---|---|---|

வேறு எந்தவொரு அரச நிறுவனத்திலும் வேறு எந்த முழு நேரப் பாடநெறியையும் நான் பின்தொடர்வதில்லை என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன். ஏனைய எந்தவொரு அரச நிறுவனத்திலும் ஒரே சமயத்தில் முழு நேரப் பாடநெறியைப் பின்தொடர்வதனைக் கண்டுபிடிக்கப்படுமிடத்து கற்கின்ற காலப்பகுதியில் எந்த நேரத்திலும் எனது பதிவு இரத்துச் செய்யப்படும் என்பதை நான் அறிவேன். மேலும் எனது அறிவுக்கு எட்டியவரை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல் உண்மையெனவும் சரியானதெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

(ரூபா 250 க்கான வங்கி ரசீது இணைக்கப்படல் வேண்டும்.)

7-306

---

**சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை ஆரம்ப தரத்திற்கு நியமிப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2006**

சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை ஆரம்ப தரத்திற்கு நியமிப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு தகுதிவாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. சுகாதார அமைச்சினால் நடாத்தப்படும் எழுத்துப்பரீட்சை பெறுபேற்றுக்கமைய திறமை அடிப்படையில் தகுதியுடைய விண்ணப்பதாரிகள் மாவட்ட இனவிகிதாசார அடிப்படையில் சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை ஆரம்ப தரத்திற்கு நியமிப்பதற்கு தெரிவுசெய்யப்படுவார்கள்.

3. நியமிக்கப்படுபவர்களின் தொகை, நியமனத் திகதி என்பன நியமன அதிகாரிகளினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட வெற்றிடங்கள், அல்லது வெற்றிடங்கள் யாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

4. **சம்பள அளவுத்திட்டம்.**- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன்படி MN 2 - 2006 பிரகாரம் சுகாதார முகாமைத்து உதவியாளர் சேவை ஆரம்ப தரத்திற்குரிய சம்பளம் ரூபா 13,640 - 10 x 120 - 11 x 140 - 6 x 210 - 14 x 290 - ரூபா 21,700 ஆகும்.

5. இப்பதவியானது நிரந்தரமானதும், பங்களிப்பு ஓய்வூதியத்திற் குரியதுமாகும்.

6. **தகைமைகள்.**- சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை ஆரம்ப தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கு பின்வரும் தகைமைகள் தேவையானதாகும் :-

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) நன்னடத்தையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஈ) பின்குறிப்பிடப்படும் கல்வித் தகைமைகள் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் :-

(i) கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ் மொழி, எண்கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம், ஆங்கில மொழி உட்பட குறைந்தபட்சம் 4 திறமைச் சித்திகளுடன் 6 விடயங்களில் சித்தியடைந்திருத்தல் ;

அல்லது

(ii) தேசிய பொதுத் தராதரப் பத்திர பரீட்சையில் முதல் மொழி/ கணிதம் உட்பட 4 விடயங்களுக்கு 'பி' தரத்திற்குக் குறையாத தேர்ச்சியுடன் ஆங்கில மொழி உட்பட குறைந்தபட்சம் ஒரே அமர்வில் 6 விடயங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் ;

அத்துடன்

(iii) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் விரும்பிய விடயப் பிரிவொன்றில் 3 விடயங்களில் தேர்ச்சியடைந் திருத்தல் ;

அல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

எல்லா விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய எல்லாத் தகுதிகளையும் 2006.08.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பெற்றிருத்தல் கட்டாயமானதாகும்.

7. **தேர்ந்தெடுத்தல் :**

(அ) சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள்ளுதல் மாவட்ட இன விகிதாசார அடிப்படையில் பொது நிர்வாக சுற்றுநிருபம் 15/ 90 க்கு அமைவாக அந்தந்த மாவட்டங்களுக்குரிய வெற்றிடங்கள் ஒதுக்கப்படும் ஏதாவதொரு மாவட்டத்தில் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத் தொகை சம்பந்தமாக அந்த மாவட்டத்திலிருந்து விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் போட்டியிடுவதற்கு தகுதியுடையவர்களாவர்.

(I) தேர்ந்தெடுத்தல் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும்.

(அ) மாவட்ட மட்டத்திற்கு உட்படுவதற்கு பரீட் சார்த்தி ஒருவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் :

(1) மாவட்டத்தினுள் பிறப்பெய்தியவராக இருத்தல் ;

அல்லது

(2) அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் ஏதேனும் ஒரு திகதிக்கு முன்பு 6 ஆண்டுகள் அம்மாவட்டத்தில் குடி யிருப்பு அல்லது 3 ஆண்டுகள் தொடர்ச்சியான குடியிருப்பு அவருக்கு இருத்தல்.

அல்லது

(3) தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் அம் மாவட்டத்தில் சொந்த இரண்டாந்தர பாடசாலைக்கல்வியைப் பெற்றிருத்தல்.

(ஆ) விண்ணப்பதாரிகள் மேலே I இன் கீழ் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னுள்ளதான 3 வருடங்களுக்கு வாக்குரிமை தேர்தல் இடாப்பு மற்றும் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்படும் கிராம அலுவலரது சான்றுப்பத்திரம் சமர்ப் பிப்பதற்கு கட்டுப்பட்டவராக இருத்தல் வேண்டும் :-

**குறிப்பு :**

(1) எவரேனும் விண்ணப்பதாரி ஒருவரின் தகப்பன் அல்லது தாய் மத்திய/ மாகாண சபை சேவையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் இடமாற்றம் புரியக் கூடிய சேவையொன்றில் ஈடுபட்டிருப்பின் அவ்விண்ணப்பதாரிக்கு தனது தந்தை/தாய் அல்லது பிறந்த இடம் தனக்குரிய மாவட்டமாக தேர்ந்தெடுப் பதற்கு அனுமதி வழங்கப்படும். (இதன் பொருட்டு விண்ணப்பதாரியினால் தன்னுடைய தாயினது/ தகப்பனது பிறப்புச்சான்றுப் பத்திரத்தின் பிரதி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)

(2) விண்ணப்பதாரி ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களின் வெற்றிடங்களின் பொருட்டு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படமாட்டாது. தான் விரும்பும் மாவட்டம் என்ன என்பது பற்றி ஒரு தரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அதில் மாற்றம் செய்யப்படமாட்டாது.

(3) போட்டிப் பரீட்சையின் திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்படும் பொழுது வெற்றிடங்களின் படி மத்திய/ மாகாண சேவையில் ஈடுபடுத்தப்படுவர். விண்ணப்பித்த மாவட்டம் எதுவாக இருப்பினும் நாடு பூராவும் அரசாங்க சேவையில் ஈடுபடுத்தல் சுகாதார முகாமைத்துவ சேவை நியதிச்சட்டத்தின் 4:3 பந்தியின் பிரகாரம் புரியப்படும்.

(4) அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப் படும் சுற்றுநிருப அறிக்கை ஏற்புடைய சந்தர்ப்பங் களினால் உபயோகப்படுத்தலாம் என்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் திறந்த போட்டிப் பரீட்சையில் புள்ளிகள் பெற்றுக்கொள்ளும் மிகக் கூடிய அளவிலிருந்து கீழ் நோக்கி வரும் வகையில் வெற்றிடங்களின் படி விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு ஈடுபடுத்தப்படுவர். நேர்முகப் பரீட்சை யில் விண்ணப்பதாரிகளினது தகைமைகள் மாத்திரம் பரிசீலிக்கப்படும் என்பதுடன் புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

(5) மாவட்டத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றி டங்களின் எண்ணிக்கையின்படி தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சையில் அதிக புள்ளி களைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் புள்ளிகள் எண் ஒழுங்கின்படி தெரிவுசெய்யப் படுவர்.

8. பரீட்சைக்கு ஏற்புடைய விடயங்களும் நேரமும் புள்ளிகளும் :

| | விடயம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | மொழியும் கட்டுரையும் (சிங்களம்/ தமிழ்) | 1 மணித்தியாலம் | 100 |
| (ii) | உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 |
| (iii) | கூட்டல் உட்பட கணிதம் | 1 மணித்தியாலம் | 100 |
| (iv) | பொதுஅறிவு | 1 மணித்தியாலம் | 100 |
| (v) | ஆங்கில மொழி | 1 மணித்தியாலம் | 100 |
| | | கூட்டுத்தொகை : | 500 |

(1) தகைமைகளையும் இயலுமைகளையும் பரீட்சிப்பதன் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள மொழியும் கட்டுரையும் வினாப்பத்திரத்திற்கு ஆவணங்களைத் தயாரித்தல், அட்டவணைகளைத் தயாரித்தல் போன்ற நிகழ்வுகள் உட்படும்.

(2) ஆங்கில மொழி வினாப்பத்திரத்தில் பந்தியொன்றை விளங்கிக் கொள்வதற்குள்ள இயலுமை, கட்டுரை எழுதுதல், ஆவணங்களை ஒழுங்கமைத்தல், சிங்களம்/ தமிழ் பந்தியொன்றை ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்தல் தொடர்பாக க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கு சமமான ஆங்கில அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது.

9. விண்ணப்பப்பத்திரம் நிரப்பும்போது மிகவும் கவனத்துடன் சரியான தகவல்கள் தரப்படுதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களின் பிரகாரம் ஏதாவது ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவருடைய விண்ணப்பவுரிமை இரத்துச் செய்யப்பட முடியும். சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் தெரியவரின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

10. **பரீட்சைக் கட்டணம்**.- "செயலாளர், சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, 'சுவசிரிபாய', 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு, கொழும்பு பெரிய தபாலகத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய மணி ஓடர் மூலம் ரூபா 250 பரீட்சைக் கட்டணம் எல்லா விண்ணப்பதாரியினாலும் செலுத்தப்படுதல் வேண்டும். மணி ஓடர் விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் எதுவித காரணத்தின் பொருட்டும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

10.1 விண்ணப்பப்பத்திரம் A4 அளவு கடதாசியினைப் பாவித்து-

(அ) இலக்கம் 01-03 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்
(ஆ) இலக்கம் 4 இலிருந்து ஏனைய பக்கங்களிலும் உள்ளடக்கப் பட்டு தயாரித்தல் வேண்டும்.

குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமையாததும், மணி ஓடர் இணைத்து அனுப்பப்படாததும், பூரணமல்லாததும் ஆன விண்ணப் பப்பத்திரங்கள் எதுவிதமான அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறைப்படி விண்ணப்பப்பத்திரம் பூரணப்படுத்தாமல் இருப்பதனால் ஏற்படும் நஷ்டத்தை விண்ணப்பதாரியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

11. (1) விண்ணப்பப்பத்திரம் வைத்து அனுப்பப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை ஆரம்ப தரத்திற்கு நியமிப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2006" எனக் குறிப்பிடப்பட்டு போட்டியிடும் மாவட்டத்தையும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

(2) விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியினது கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளினதும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர், வருடாந்தம் ரூபா 124,080 சம்பளம் அல்லது அதற்கும் அதிகமாக உள்ள சம்பளத்திட்டத்தில் ரூபா 1,560 அல்லது அதற்கும் கூடுதலான சம்பளத்திட்டத்தை உடைய அரசாங்கத்தில் நிரந்தரப்பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(3) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் 2006.08.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் :-

பணிப்பாளர் (நிர்வாகம்) 06,
சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
'சுவசிரிபாய',
கொழும்பு 10.

12. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சை நடைபெறும் திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பரீட்சை அனுமதி அட்டை சுகாதார அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும். இது சம்பந்தமான அறிவித்தல்கள் பத்திரிகையில் வெளியிடப்படுவதுடன், இது சம்பந்தமாக விண்ணப்பதாரிகள் கவனிப்புடன் இருத்தல் வேண்டும். பரீட்சையில் விண்ணப்பதாரியினது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பயன்படுத்தக்கூடிய அடையாள அட்டை ;
(ஆ) பயன்படுத்தக்கூடிய கடவுச் சீட்டு

13. குறித்த காலத்தில் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பின்வரும் விபரங்களுடன் பணிப்பாளர் (நிர்வாகம்) 06 உடன் தொடர்புகொள்ளுதல் வேண்டும். தொலைபேசி இலக்கம் 011-2693339

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) தெரிவு செய்த நகரம் ;
(இ) விண்ணப்பித்த மாவட்டம் ;
(ஈ) விண்ணப்பம் பதிவு செய்து அனுப்பிய இலக்கமும் தபால் அலுவலகமும் ;
(உ) பணம் செலுத்திய பற்றுச்சீட்டுப் பத்திரத்தின் இலக்கம், திகதி, அலுவலகம் என்பன.

14. எல்லா விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள பொதுப் பரீட்சை சட்டத்திட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கு கடப்பாடுடையவராவர்.

ரஞ்சித் மலிகஸ்பே,
செயலாளர்,

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு,
'சுவசிரிபாய',
385, வணக்கத்துக்குரிய பத்தேகம
விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2006.06.30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை ஆரம்ப தரத்திற்கு நியமிப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2006**

(கொடுக்கப்பட்டுள்ள கூடுகளில் சரியான குறியீடு/இலக்கங்கள் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி

சிங்களம் - S
தமிழ் - T
(குறித்த எழுத்தைக் கூட்டில் எழுதுக.)

வெற்றிடம் சம்பந்தமாக போட்டியிடுவதற்காக வர்த்தமானி அறிவித்தலில் 7.0 பந்தியின் பிரகாரம் நீங்கள் தெரிவுசெய்த மாவட்டத்தைக் கீழே குறிப்பிடுக.

| மாவட்டம் |
|---|
| |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
(ஆ) முழுப்பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
(இ) முழுப்பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்) :-----.
(ஈ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

2. (அ) நிரந்தர விலாசம் :-

| ஆங்கிலத்தில் | சிங்களத்தில்/தமிழில் |
|---|---|
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |

(ஆ) அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய விலாசம் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

3. (அ) ஆண்/பெண் விபரம் :-----.
பெண் - F
ஆண் - M
(குறித்த எழுத்தைக் கூட்டில் எழுதுக)

(ஆ) பிறந்த திகதி :-----.

வருடம் மாதம் திகதி

(இ) 2006.08.21 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4. (அ) வசிக்கும் கிராம அலுவலரது பிரிவு :-----.
(ஆ) உரிய உதவி அரசாங்க அதிபர்/பிரதேச செயலாளர் பிரிவு :-----.
(இ) குறித்த மாவட்டத்தில் எப்போது இருந்து வசிக்கிறீர்கள் ? : -----.

5. (அ) கல்வித் தகைமைகள் :-
க. பொ. த. (சாதாரண) பரீட்சை :-----.
(i) பரீட்சை வருடமும் மாதமும் :-----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :-----.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

க. பொ. த. (உயர்தர) பரீட்சை சம்பந்தமான விபரங்கள் :-
(i) பரீட்சை வருடமும் மாதமும் :-----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :-----.
(iii) பரீட்சைப் பெறுபேறுகள் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருந்தால்-
(i) பல்கலைக்கழகம் :-----.
(ii) பட்டம் :-----.
(iii) வருடம் :-----.

6. வேறு தகைமைகள் :-----.

7. நீங்கள் எப்போதாவது ஏதாவது காரணம் பொருட்டு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டீர்களா ? :-----.

ஆம் ☐ இல்லை ☐
(குறித்த கூட்டில் “x” இடவும்.

ஆம் என்றால் விபரம் தரவும்) :-----.

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரம் :-
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :-----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :-----.
(iii) செலுத்திய தொகை :-----.

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :-**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்தவரை உண்மையானதும் சரியானதும் என விசுவாசத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு ஏதாவது பகுதி பூரணப்படுத்தாமல் அல்லது பிழையாக பூரணப்படுத்தியிருந்தால் ஏற்படக் கூடிய நஷ்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு சம்மதிக்கிறேன். மேலும் இங்குள்ள எல்லா பகுதிகளும் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள உறுதியுரை உண்மையல்ல என நிரூபிக்கப்பட்டால், நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவனாவதற்கும் நியமனம் பெற்ற பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உள்ளாவேன் என்பதை நான் அறிவேன்.

(இ) இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகள் யாவற்றையும் பின்பற்றுவதற்கு உடன்படுகிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்படும் ஏதாவது விபரத்தை பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

..........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

10. **விண்ணப்பதாரியினது கையொப்பம் உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி .......................................................................... என்பவரை எனக்குத் தனிப்பட்ட ரீதியில் தெரிந்தவரென்றும் அவர் என் முன்னிலையில் ....................................... ஆந் திகதி அவருடைய கையொப்பத்தை இட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

திகதி :-----.

உறுதிப்படுத்துபவரது முழுப்பெயர் :-----.
பதவி :-----.
விலாசம் :-----.
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

| மாவட்டங்களின் பெயர் | இலக்கங்கள் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |
| அனுராதபுரம் | 19 |
| பொலன்னறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனராகல | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

7-405

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.